பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 76

திங்கட்கிழமை
10 பெப்ரவரி 2025

தை 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056


விவரம் 2ஆம் பக்கத்தில்

## சித்திரைப் புத்தாண்டுக்கு முன் உள்ளாட்சித் தேர்தல் நடக்காது!

கொழும்பு, பெப்.10
உள்ளூராட்சிச் சபைத்தேர்தலை சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தாலும், அதற்கான சத்தியங்கள் இல்லை என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. ஆயினும் புத்தாண்டின் பின்னர் ஏப்ரல் மாத இறுதிக்குள் உள்ளூராட்சிச் சபைத்தேர்தலை நடத்துவது தொடர்பில் தற்போது அரசாங்கம் அவதானம் செலுத்தி ☞ 11

# நல்லிணக்க விவகாரங்களில் தலையைக் கொடுக்கும் சீனா

## இலங்கை வருகின்றது உயர்மட்டக் குழு டில்லியின் ஆதிக்கத்தைக் குறைக்கும் முயற்சி?

**கொழும்பு, பெப்ரவரி 10**
**இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் மற்றும் நல்லிணக்க முன்னெடுப்புகளில் டில்லியே இதுவரை கூடுதலாகப் பங்களித்துவரும் நிலையில், அவற்றிலும் சீனா தன்னைப் புகுத்திக்கொள்ளும் முயற்சிகளை ஆரம்பித்துள்ளது என்று இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.** ☞ 11

# நாடு முழுதும் நேற்று 5 மணிநேர மின்தடை

## மக்களின் இயல்புவாழ்வு பாதிப்பு குரங்கால் வந்த வினையா?



கொழும்பு, பெப்.10
நாடளாவிய ரீதியில் நேற்று சுமார் 5 மணி நேரம் மின் தடை ஏற்பட்டது. மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகள் மின்சாரசபையால் முன்னெடுக்கப்பட்டிருந்தநிலையில், நேற்று இரவு மின் விநியோகம் வழமைக்குத் திரும்பியது. ☞ 11

## மின்தடை விரிவான தகவல்கள் இன்று

கொழும்பு, பெப்.10
நாடு முழுவதும் நேற்று ஏற்பட்ட திடீர் மின்தடை தொடர்பான விரிவான தகவல்கள் இன்று வெளியிடப்படும் என்று இலங்கை மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். ☞ 11

## மின் தடை ஏன்?

### அறிக்கை தேவை

கொழும்பு, பெப்.10
நாடளாவிய ரீதியில் நேற்று ஏற்பட்ட மின்தடை தொடர்பில் அறிக்கை கோருவதற்கு இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.
மின்தடை பற்றிய அறிக்கை கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ-எ-இ)

### யாழ். நகரப் பகுதியில் வைத்து

# இளைஞனை காரில் கடத்தி 80 லட்சம் ரூபா கொள்ளை!

## பட்டப்பகலில் பதறவைத்த சம்பவம் பெண் உட்பட நால்வர் கைது



யாழ்ப்பாணம், பெப்.10
யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் வைத்து இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று 80 இலட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் நால்வர் யாழ்ப்பாணம் குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள ☞ 11



## மூத்த ஊடகவியலாளர் பாரதி மாரடைப்பால் காலமானார்!

யாழ்ப்பாணம், பெப்.10
தமிழ் ஊடகப் பரப்பில் மூத்த ஊடகவியலாளராக விளங்கிய இராஜநாயகம் பாரதி நேற்றுத் தனது 63 ஆவது வயதில் காலமானார். ☞ 11

## போதை மாத்திரை; இளைஞன் கைது

யாழ்ப்பாணம், பெப்.10
போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். ☞ 11



முச்சந்தி முரளி

'வாய்பேசமாட்டினம் எண்டதால எல்லாப் பழியையும் குரங்குகளில போடுறது ஈஸி கண்டியளோ'

### அரகலய கால சேத நஷ்டஈடு

## கெஹலியவுக்குக் கொடுத்ததை மக்களுக்குக் கொடுத்திருக்கலாம்

### கிளிநொச்சியில் தெரிவித்தார் பிமல்

கிளிநொச்சி, பெப்.10
கெஹெலிய ரம்புக்வெல பெற்ற நஷ்டஈட்டைக் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்திருக்கமுடியும் என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க.
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க "தூய இலங்கை" திட்டத்தின் ஓர் அங்கமாக நேற்றுக் கிளிநொச்சிக்குக் களப்பயணம் ஒன்றை மேற்கொண்டிருந் ☞ 11

### இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிரான

## வழக்கை முடிவுக்குக் கொண்டுவர வரைவு இணக்க நியதி சமர்ப்பிப்பு

### கட்சியின் பதில் தலைவர், செயலாளருக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம், பெப்.10
இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக திருகோணமலை மாவட்ட நீதவான் நீதின்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை இணக்கப்பாட்டுடன் முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம் ஆகியோருக்குக் கடிதம் ஒன்றை ☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 09.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3984 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 08 22 29 75 |
| விசேட எழுத்து | F |

**ஹந்தஹண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 09.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1051 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 31 45 61 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 09.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0010 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 0 3 3 3 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 09.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2090 |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கங்கள் | 03 62 64 69 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 09.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5742 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 1 9 7 9 2 3 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 09.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1772 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 08 16 32 66 |
| விசேட எழுத்து | V |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 09.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 317 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 7 9 2 3 |

# பயங்கரவாதத்தை எதிர்க்க இலங்கைக்கு முழு ஆதரவு!

## இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

**கொழும்பு, பெப். 10**

**இலங்கையால் மேற்கொள்ளப்படும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா நிபந்தனையற்றதும், அசைக்க முடியாததுமான ஆதரவை வழங்கும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

சந்தோஷ் ஜாவுக்கும், இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துயகொந்தாவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மாலை சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போதே, இலங்கையின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கும் இந்தியா என்றும் துணைநிற்கும் என்று தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகாலப் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் இந்தச் சந்திப்பின்போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டதாகவும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கு இந்தியா இன்று வரை வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவுக்கு, இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான ஆதரவை இந்தியா தொடர்ந்தும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையையும் பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துயகொந்தா முன்வைத்தார். (ம-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 09.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | K | 1 2 1 6 6 5 | 0450 |

**Super Ball DLB**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 09.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | 2716 | Q | 03 09 35 59 |

**சனிதா DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 09.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | K | 17 25 63 67 | 4877 |

**SASIRI DLB**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 09.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | 0619 | 25 38 43 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் | வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 09.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | சிம்மம் | 31 39 42 60 | 4428 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 09.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | Y | 31 | 05 33 36 67 | 1892 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 09.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | M | 03 43 48 51 | 2542 |

# இழப்பீடுபெற்ற எம்.பி.க்கள் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, பெப்.10

அரகலய போராட்டக் காலத்தில் தமது சொத்து சேதமடைந்ததாகக் கூறி அரசாங்கத்திடமிருந்து பெருந்தொகை இழப்பீடு பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்தும் போலியான தகவல்களையும் உள்ளடக்கியும் சிலர் கூடுதலான இழப்பீட்டைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

மேலும் சிலர் காப்புறுதி நிறுவனங்களிடமும் இழப்பீடு பெற்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. எனவே, இழப்பீடு முறையாகப் பெறப்பட்டுள்ளதா? என்பது பற்றியும், முறைகேடு இடம்பெற்றிருந்தால் மேலதிகமாகப் பெற்றுள்ள தொகையை மீளப்பெறுவதற்கான இயலுமை பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-44)

# சிங்களவர்களே இனத்தைப் பெருக்குங்கள்

## கூறுகிறார் சீலரத்ன தேரர்

கொழும்பு, பெப்.10

இந்த ஆட்சியின்கீழ் சிங்களவர்களுக்கு என்ன நடக்குமோ எனத் தெரியவில்லை. எனவே திருமணமான சிங்கள இளைஞர், யுவதிகளே குறைந்தபட்சம் ஆறு குழந்தைகளையாவது பெற்று எமது இனத்தைப் பெருக்குங்கள் என்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஜன சத்த பெரமுனக் கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிலர் தமது இனத்தைப் பெருக்கித்தான் நாடுகளைப் பிடிக்கின்றனர். எம்மவர்கள் இனத்தைப் பெருக்குவதில்லை. இரு குழந்தைகளைப் பெற்ற பின்னர் குழந்தைக் கட்டுப்பாடு செய்கின்றனர். சிங்கள இனத்தின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. எனவே, திருமணமான இளைஞர் , யுவதிகளே முடிந்தளவு குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். குறைந்தபட்சம் ஆறு குழந்தைகளையாவது பெற்றுக்கொள்ளுங்கள். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் குழந்தைகளுக்கு ஒருவேளை உணவையாவது வழங்குமாறு மகா சங்கத்தினரிடம் கேட்டுக்கொள்கின்றேன். எமது இனத்தைப் பாதுகாக்கவேண்டும். இந்த ஆட்சியின் கீழ் சிங்களவர்களுக்கு என்ன நடக்குமோ என்பதைக் கூற தற்போது முடியாது- என்றார். (ச-44)

# தரிசன யாத்திரையின்போது புலனாய்வாளர்கள் அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப்.10

இலங்கையில் நிரந்தர அமைதி, நல்லிணக்கம் வேண்டி நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து காலி சிவன் ஆலயம் வரை இடம்பெற்ற புனித திருத்தலத் தரிசன யாத்திரையின் போது அரச புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாகப் பின்தொடர்ந்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த யாத்திரை கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலி சிவன் ஆலயத்தைச் சென்றடைந்தது.

இதன்போது புலனாய்வாளர்கள் யாத்திரை சென்ற அடியவர்களைத் தீவிரமாக நோட்டமிட்டதுடன் அச்சுறுத்தும் வகையில் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளையும் எடுத்துள்ளனர்.

அத்துடன் பாணந்துறை முருகன் ஆலயத்தினரிடம் யாத்திரைக் குழுவினர் அங்கு செல்ல முன்னரே பாணந்துறைப் பொலிஸாரால் விசாரணை நடத்தப்பட்டுள்ளதுடன் யாத்திரையில் கலந்துகொண்டவர்களின் தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-66)




கௌவர ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களால் வழங்கப்பட்ட 2023/24 ஆம் ஆண்டின் சிறந்த ஏற்றுமதியாளருக்கான விருதை MAS ஹோல்டிங்ஸின் பிரதம நிறைவேற்று அதிகாரி நுரேன் பெர்னாண்டோ மற்றும் யுனிசெலா பாணந்துறையின் JCC தலைவர் டி. இஷிகா ரசானி பீரிஸ் ஆகியோர் பெற்றுக்கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல் பற்றி அரசியல் கட்சிகளுடன் பேச்சு

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு


**கொழும்பு, பெப்.10**

**காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்தவேண்டும். அந்தவகையில் மாகாணசபைத் தேர்தல் குறித்து அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்தவுள்ளோம் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார். உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் குறித்து வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்குப் புதிதாக வேட்புமனுக்களை கோரவுள்ளதால் ஆரம்பத்தில் இருந்து தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்கவேண்டும். தேர்தல் பணிகளுக்குத் தேவையான நிதி திறைச்சேரியால் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே நிதி நெருக்கடி ஏதும் ஏற்படாது.

உள்ளூராட்சி அதிகாரசபைகள் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தற்போது அவை விசாரணைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்புத் திகதியை நிர்ணயிக்கமுடியும். அதேவேளை மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சிக்கல்களுக்குத் தீர்வுகாணவேண்டிய பொறுப்பு நாடாளுமன்றத்துக்கு உண்டு என்பதைத் தொடர்ச்சியாக வலியுறுத்தியுள்ளோம். எதிர்வரும் காலங்களில் அரசியல் கட்சிகளுடன் மாகாணசபைத் தேர்தல்கள் குறித்து பேச்சில் ஈடுபடவுள்ளோம். மாகாணசபைத் தேர்தல்கள் குறித்து சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (ச-இ)



# மோ.சைக்கிள் விபத்து; இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்பாணம் - மன்னார் பிரதான வீதியின் தனங்களப்புப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளே வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த இளைஞர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-28)

# 14 இந்திய மீனவர்கள் மன்னாரில் கைது

மன்னார், பெப்.10

இலங்கைக் கடற்பகுதிக்குள் உட்புகுந்து மன்னாருக்கு வடக்கே எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 14 இந்திய மீனவர்கள் நேற்றுக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது 2 மீன்பிடிப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படை ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார். கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கிளிநொச்சி கடற்றொழில் பரிசோதகர் அலுவலகத்தில் ஒப்படைக்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

# பண்டாரநாயக்க விமானநிலையம் மறுவடிவமைப்பு

கொழும்பு, பெப்.10

இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், பயணிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்காகப் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வரவேற்புப் பீடத்தில் மறுவடிவமைப்புகள் செய்யப்படவுள்ளன. இந்த மறுவடிவமைப்பில் காத்திருப்பு நேரத்தைக் குறைக்க ஏ.ரி.எம். இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் இலங்கை சுற்றுலாப் பயணத் தகவல் கருமபீடத்தை மைய இடத்துக்கு மாற்றுவது ஆகியவை அடங்கும் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (ச-இ)

# மூதாட்டியிடம் கொள்ளை; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், பெப்.10

வட்டுக்கோட்டையில் வயோதிபப் பெண்ணொருவரிடம் நூதன முறையில் பணம் கொள்ளையடித்துச் சென்ற சந்தேகநபர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் வீட்டில் தனித்திருந்த மூதாட்டியிடம் விவசாய அதிகாரி எனத் தன்னை அடையாளப்படுத்திய நபர் 50 ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்துச் சென்றிருந்தார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையில் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிவான்நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125,27)




**கோ**லியாத் எண்ட பெரிய அரக்கனை தாவீது எண்ட சின்னப்பெடியன் கெற்றப்போல் கல்லால அடிச்சு விழுத்தினான் எண்டதை இதுவரைக்கும் நம்பாத ஆக்கள்கூட, நேற்று அதை நம்பியிருப்பினம். பின்ன, ஒரு குரங்கு பார்த்த வேலையால முழு நாடுமே அஞ்சு மணித்தியாலத்துக்கு மேல ஆத்தலைஞ்சு போட்டுதெல்லோ. நேற்று கலியாண வீட்டு நாள். கன கலியாண வீடுகளில தாலிகட்டு முடிஞ்சகையோட, சொல்லாமல் கொள்ளாமல் அபசகுனம் மாதிரி கரண்ட் கட்டாப் போட்டுது. பிறகு ஓடியாடி ஜெனரேட்டரைப் போட்டுத்தான் அந்தக் கலியாண வீடுகளை களைகட்ட வைச்சவை. எண்டாலும் பொறுத்த நேரத்தில அதுவும் கலியாண வீடு மாதிரி சுபகாரியங்கள் நடக்கேக்க இப்பிடி கரண்ட் கட்டாகி, அந்த இடமே இருட்டா இருக்கிறது மாப்பிள்ளை, பொம்பிளை ரண்டு பேருக்கும் 'ஏதோ கெட்டதுக்கு அறிகுறியோ?' எண்டு ஏடகூடமாத்தான் யோசிச்சு பயப்பிட வைக்கும்.

ஒரு கலியாண வீடே கரண்ட் இல்லாம அந்தரிக்குது எண்டால், உந்த ஆஸ்பத்திரியளில அஞ்சு மணித்தியாலம் கரண்ட் இல்லாட்டி எவ்வளவு கரைச்சல்? எக்ஸ் றே எடுக்கேலாது, ஸ்கான் செய்யமுடியாது, ஒப்பிரேசன் செய்ய முடியாது, ப்ரிட்ஜுக்குள்ள வைச்சிருக்கிற மருந்துகள் பழுதாப்போடும் எண்டு கனக்கச் சிக்கல்கள். அப்பிடி நேற்றும் வடக்கிலையும் சில ஆஸ்பத்திரியளில கரண்ட் இல்லாமல் கதகளி ஆட்டமாம். இப்பிடி முக்கியமான ஆஸ்பத்திரியளில கரண்ட் இல்லாட்டி அதுக்கு மாற்று ஏற்பாடா ஜெனரேட்டர் வைச்சிருக்கவேணும். சில ஆஸ்பத்திரியளில ஜெனரேட்டர் இல்லை. இன்னும் சிலதில ஜெனரேட்டர் இருந்தும் அதுகள் வேலை செய்யிற கொண்டிசனில இல்லை. அப்ப எப்பிடி இப்பிடிச் சிக்கலான நிலையளில தாக்குப்பிடிக்க ஏலும்?

இப்பிடி கலியாண வீடு முதல் ஆஸ்பத்திரியள் வரை நேற்று கலங்கடிச்ச கரண்ட் கட் விசயம், பாணந்துறையில குரங்கொண்டு பாய்ஞ்சதால தான் வந்தது எண்டு சொன்னால் என்னெண்டு ஏற்றுக்கொள்ள ஏலும். நாய்க்கு எங்க கல்லெறி பட்டாலும் காலை மட்டும் தூக்கிறமாதிரி, இப்ப இலங்கையில என்ன பிரச்சினை எண்டாலும் அதைக் குரங்கின்ர தலையில கட்டுற விளையாட்டு நடக்குது. தேங்காய்த் தட்டுப்பாடு எண்டாலும் அதுக்கும் காரணம் குரங்கு, நெல்லுத்தட்டுப்பாட்டுக்கும் காரணம் குரங்கு, தொற்றுநோய் வந்தாலும் அதுக்குக் காரணம் குரங்கு எண்டு சொல்லிச் சொல்லி இப்ப கரண்ட் கட்டானாலும் காரணம் குரங்கு எண்டு சொல்லத் தொடங்கிட்டினம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** வாழ்க்கைத்துணைக்கு அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். மாலையில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். பிற்பகலுக்கு மேல் மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**தனுசு:** அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டாலும் கிடைத்துவிடும். புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்குச் சிறந்தநாள்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் உங்கள் விருப்பப்படி செயற்படுவார்கள்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடு நீங்கும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித்தருவார்.

சாவ. மருத்துவமனையில்

# மருத்துவ நிபுணர்களுக்கு தங்குமிட வசதிகளில்லை!

சாவகச்சேரி, பெப்.10

**சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மருத்துவ நிபுணர்களுக்கான தங்குமிட வசதியின்மையால் மருத்துவ நிபுணர்கள் யாழ்ப்பாணம் சென்றுவரும் நிலை காணப்படுகின்றது என்று மருத்துவமனை நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.**

மருத்துவமனையின் சேவைக்கென நான்கு மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தங்குமிட வசதிகள் இன்னமும் செய்துகொடுக்கப்படவில்லை. விபத்துச் சிகிச்சை அலகு மருத்துவ நிபுணர் அவசியம் மருத்துவமனையில் தங்கியிருக்கவேண்டும் என்பதால் தங்குமிட வசதியின்மையால் சத்திரசிகிச்சைக்கூடத்திலேயே அவர் தங்கியிருந்து சேவையாற்றுகிறார். மருத்துவமனையில் 25இற்கு மேற்பட்ட மருத்துவர்கள் கடமைபுரிகின்றனர். இவர்களில் தென்னிலங்கையைச் சேர்ந்த மருத்துவர்களும் கடமையாற்றும் நிலையில் தங்குமிட வசதிகளை மருத்துவமனையில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-41-9)



# இந்திய மீன்பிடிப்படகு ஏலத்தில் விற்பனை!

யாழ்ப்பாணம், பெப். 10

இலங்கைக் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டபோது பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடிப்படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டன.

கடந்த 2022 ஆம் ஆண்டு வல்வெட்டித்துறை கடற்பரப்பில் வைத்து நான்கு மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் அவர்களின் மீன்பிடிப்படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அரசுடமையாக்கப்பட்டிருந்தன. அரசுடமையாக்கப்பட்ட குறித்த இந்திய மீன்பிடிப்படகு மற்றும் மீன்பிடி உபகரணங்களே 20 இலட்சத்து 42 ஆயிரத்து 350 ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. (ச-22,100)

# 5 நாள்களில் 44 ,293 சுற்றுலாவிகள்

கொழும்பு, பெப்.10

இந்த மாதத்தின் கடந்த ஐந்து நாள்களில் மாத்திரம் 44,293 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தின் கடந்த ஐந்தாம் திகதிவரையான காலப்பகுதிக்குள் இரண்டு இலட்சத்து 97ஆயிரத்து 54 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# மஹாஹோமம்

சாவகச்சேரி, பெப்.10

மிருசுவில் உசன் கந்தசுவாமி கோவில் 108 கலசம் மஹாஹோமம் குகஸ்ரீ இரத்தினகேதீஸ்வரன் சிவாச்சாரியார் தலைமையில் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் மாதம் இரண்டாம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (ச-41-9)

# பால்குடப் பவனி!

யாழ்ப்பாணம், பெப்.10

முருகப்பெருமானுக்காக அனுஷ்டிக்கப்படும் விரதங்களில் ஒன்றான தைப்பூசத் திருநாளை முன்னிட்டு பால்குடப் பவனி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் தலைவாசல் கோபுர முன்றலில் ஆரம்பமாகி வரலாற்றுச்சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் வரை இடம்பெறவுள்ளது. இந்தப் பால்குடப் பவனியில்கலந்துகொள்ள விருப்பமுள்ள அடியவர்களை 077369 1392 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகத் தொடர்பு கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-22,66)



கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்துக்கு அமைவாக நயினாதீவுக் கடற்கரையைச் சூழவுள்ள பகுதியில் ஒதுங்கியுள்ள பிளாஸ்ரிக் கழிவுப்பொருள்கள் மற்றும் ஏனைய கழிவுகளை அகற்றும் பணி வேலணைப் பிரதேசசபையின் நயினாதீவு உப அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் நயினாதீவு வடக்கு கடற்தொழிலாளர் சங்கத்தினரால் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-41-66)



சோழ மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் குளக்கோட்டு மன்னனினால் புனருத்தாரணம் செய்யப்பட்ட சோழர் காலத்து வரலாற்றுச் சிறப்புபெற்ற சாவகச்சேரி நாள்தோன்றி வரிவனேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (ச-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

பலம் பொருந்தியவனின் பலத்தைக் குறைப்பதால் பலவீனனை பயில்வானாக்க முடியாது.

– ஆபிரகாம் லிங்கன் –

# நலிந்தவனின் குரல்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறுவது உறுதி என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றது அமெரிக்கா. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படும் குற்றவியல் பிரேரணைகள் மற்றும் தீர்மானங்களில் நம்பிக்கையில்லை என்றே, அந்த அமைப்பில் இருந்து வெளியேறும் முடிவை அறிவித்திருக்கின்றார் ட்ரம்ப். அமெரிக்காவின் தலைமைத்துவ வெற்றிடம் ஏற்படுத்தப்போகும் தாக்கம் பாரதூரமானது. உலக ஒழுங்கில் கனதியான செல்வாக்கைச் செலுத்தவல்ல ட்ரம்பின் தீர்மானத்தால், நேரடியாகப் பாதிப்பை எதிர்கொள்ளப்போகும் தரப்பாகத் தமிழர்களும் காணப்படுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிரான தீர்மான வரைவுகளுக்குத் தலைமையேற்ற நாடாகவும், பிரதான அனுசரணையாளராகவும் அமெரிக்காவே காணப்படுகின்றது. ஆதலால், மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா வெளியேறும் முடிவு, கொழும்பின் மீதிருந்த அதீத அழுத்தத்தைச் சட்டென அகற்றிவிடுவதற்கு ஒப்பானது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து எப்போது தப்பிப் பிழைக்கலாம் என்றிருந்த இலங்கைக்கு, இப்போது ஒரு வாய்ப்பு அகலத் திறக்கப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா இல்லாத நிலையில், அமெரிக்காவின் தலைமையில் கொண்டுவரப்பட்ட தனக்கு எதிரான தீர்மானங்களை இலங்கை நிச்சயம் சவாலுக்கு உட்படுத்தும். அதில் இரண்டாவது கருத்துக்கும் சந்தேகத்துக்கும் இடமில்லை. எனவே, இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஓரிரவில் நீர்த்துப் போகாவிட்டாலும், ஒரு தொய்வுநிலை ஏற்படுவதற்கு இப்போது வழிவகைகள் கனதியாகத் தென்பட்டிருக்கின்றன. 'தாமும் வல்லரசுகள்தான்' என்று அமெரிக்காவுக்கு நிகர்நிக்கும் பிரான்ஸ், பிரிட்டன் நாடுகளின் தலைகளில் தற்போது கூடுதல் பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ளன. நலிந்தவனின் குரல் எப்போதும் பலவீனமாகவே இருக்கும். அது காலமாற்றங்களுக்கும், புறத்தாக்கங்களுக்கும் உட்பட்டே பயணிக்கும் என்பதே உலக நியதி. ஆதலால், நலிந்தவர்களான தமிழர்கள் மீதான இனப்படுகொலைகளுக்கான நீதியும், புறத்தாக்கங்களுக்கு உட்பட்டு நலிவடையப் போகின்றதா? அல்லது இன்னும் 'வீரியத்துடன்' மாற்றுத் தலைமையின் கீழ் தொடர்ந்துகொண்டு செல்லப்படப் போகின்றதா? என்பதற்கு பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் பதில் வழங்க வேண்டும். அந்த நாடுகளின் பதிலில்தான், அவையும் உண்மையில் வல்லரசுகள்தானா அல்லது அமெரிக்காவின் நிழலின் கீழ் நின்றுகொண்டு 'நானும் ரவுடிதான்' என்று குரலெழுப்பும் போலி முகங்களா என்பது தெரியவரும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறிய ட்ரம்ப், தற்போது சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தையும் சரமாரியாக விமர்சித்துள்ளார். அத்துடன், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு எதிராகத் தடைகளையும் அறிவித்திருக்கின்றார். ஆக தமிழர்கள், பலஸ்தீனர்கள், குர்துக்கள் என பல இனக்குழுமங்களுக்கான நீதிக்கதவுகளைத்தான் ட்ரம்ப் தன் செயற்பாடுகளால் அடைத்து வருகின்றார். விழாதிருந்த பேரரசுகள் என உலகில் ஒன்றுமேயில்லை. அதில் அமெரிக்கா மட்டும் விதிவிலக்கா என்ன?






# யாழ்.– இந்தியா இடையே கூடுதலான விமானசேவை

## இன்டிகோ எயார்லைன்ஸ் முயற்சி

**கொழும்பு, பெப். 10**

**யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில், அதிகளவான விமானசேவைகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.**

இந்தியாவின் மிகப்பெரிய விமான நிறுவனங்களில் ஒன்றாகவும், குறைந்த கட்டண விமானசேவை வழங்குநருமான 'இன்டிகோ எயார் லைன்ஸ்' நிறுவனமே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேவைகளை அதிகரிக்கும் பட்சத்தில், தென்னிந்தியாவுக்கும், இலங்கையின் வடமாகாணத்துக்கும் இடையிலான விமான இணைப்பை மேம்படுத்தமுடியும் என்றும், நேரத்தை மீதப்படுத்த முடியும் என்றும் இன்டிகோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணத்துக்கும் இந்தியாவின் பெங்களூர் நகரத்துக்கும் இடையில், விமான சேவையின் தேவைப்பாடுகள் அதிகரித்துவரும் நிலையில், புதிய சேவைகளை உருவாக்குவது தொடர்பில், வடமாகாண ஆளுநருடன் இன்டிகோ நிறுவன பிரதானிகள் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம-இ)

# துப்பாக்கியுடன் டுபாய் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள்

கொழும்பு, பெப்.10

கல்கிஸைப்பொலிஸ்நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர்துப்பாக்கிமற்றும்பல தோட்டாக்களுடன் தலைமறைவாகியுள்ளார் .

இதுதொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில், சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து டுபாய்க்கு சென்றுள்ளார் எனத் தெரியவந்தது.

குறித்த பொலிஸ் அதிகாரியை மீண்டும் நாட்டுக்கு அழைத்துவருவதற்குச் சர்வதேசப் பொலிஸ் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# டொலர் வருவாய் ஜனவரி உயர்வு

கொழும்பு, பெப்.10

2025 ஜனவரியில் வெளிநாட்டுத் தொழிலாளர்களால் 573 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இது கடந்த 2024 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும்போது 17.5% சதவீத அதிகரிப்பு எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை 2024 ஆம் ஆண்டில் மொத்தமாக வெளிநாட்டுத் தொழிலாளர்களிடமிருந்து 6.57 பில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்குக் கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# 2.5 மில்லியன் தென்னைகளை இவ்வாண்டு பயிரிடத் திட்டம்

கொழும்பு, பெப்.10

2025ஆம் ஆண்டுக்குள் 2.5 மில்லியன் தென்னை மரங்களைப் பயிரிடுவதற்குத் தெங்குப் பயிர்ச்செய்கை சபை திட்டமிட்டுள்ளது. இந்தச் செயல்முறையின் முதற்கட்டம் கம்பஹா மாவட்டத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று அதன் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இவற்றில் ஒரு மில்லியன் மரங்கள் வடக்கு தென்னை முக்கோண வலயத்துக்கு அருகில் நடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
செவ்வாய்க்கிழமை - தை - 29
11.02.2025
சுபநேரம் : 11.04 - 12.34
ராகுகாலம் : 03.34 - 05.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப்போக்குவரத்தில் மின்னணுக் கட்டணமுறை

கொழும்பு, பெப்.10

பொதுப்போக்குவரத்துத் துறையில் மின்னணுக் கட்டண முறையை அறிமுகப்படுத்தவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணையகம் அறிவித்துள்ளது. பணப்பயன்பாட்டைக் குறைத்து பயணிகளுக்கு அதிக வசதியை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இந்த முறைமை மூலம், வங்கி அட்டைகளைப் பயன்படுத்தி பணம் செலுத்தமுடியும். எதிர்காலத்தில் ஒவ்வொரு பேருந்திலும் மின்னணுக் கட்டண சாதனங்கள் நிறுவப்படும் என்று போக்குவரத்து ஆணையகம் தெரிவித்துள்ளது. (ச-இ)


## கடை திறப்பு விழா அழைப்பு

## ஸ்ரீ சரவணபவன்

## உயர்தர சைவ உணவகம்

இன்று (10.02.2025) திங்கட்கிழமை
மு.ப. 9.35 - 10.30 வரையுள்ள சுப வேளையில்
திறந்து வைக்கப்படவுள்ளது.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைத்து வாடிக்கையாளர்களையும் வருகை தருமாறு வருக வருக என வரவேற்கின்றோம்.

- காலை உணவுகள்
- மதிய உணவுகள்
- சிற்றுண்டி வகைகள்
- இரவு உணவுகள்

● ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்

அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு முன்பாக

தொ.பே.: 077 563 3459

(cs.57456) (N-1)


## UNIVERSITY OF JAFFNA – SRI LANKA
## INVITATION FOR BIDS (IFB)
## STILL PHOTOGRAPHY FOR 39th ANNUAL GENERAL CONVOCATION – 2025

1. The Chairman, Procurement Committee of University of Jaffna invites sealed bids from eligible and qualified bidders for the Still Photography to cover 39th Annual General Convocation -2025 of the University of Jaffna which is scheduled to be held on 19th,20th,21st and 22nd of March, 2025.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have the valid business registration with a minimum of five-year experience in relevant field.
3. Interested bidders may obtain further information from the Finance Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna and view the Bidding Documents at the same address on any working day from 0900hrs to 1500 hrs. Contact number: 021 2210962/0773095966/0776186358
4. A complete set of bidding documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Assistant Bursar (Supplies I) Finance Branch, University of Jaffna From 10th February 2025 to 24th February 2025 from 0900 hrs to 1500 hrs upon payment of a non- refundable fee of Rupees two thousand (Rs.2000/-) to be deposited to the Peoples Bank, University of Jaffna with the Reference No "970000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip.
5. Bidding document and other details will be available in the University website www.jfn.ac.lk.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Assistant Bursar (Supplies I) Finance Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Finance Branch to reach on or before 10.00 am on 25th February 2025. Bids will be opened soon after closing at 10.00 am on 25th February 2025 at the Finance Branch in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 60 Days from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Bidding document.
   - In favour of "Vice Chancellor, University of Jaffna"
   - For an amount of Rs. 15,000/=
   - Issued by one of the agencies (Banks) acceptable to the client.
9. Pre-Bid meeting will be held on 17th February, 2025 at 10.00 am in the Finance Branch, University of Jaffna.

**Vice Chancellor,**
**University of Jaffna, Thirunelvely, Jaffna**
**07.02.2025**


# தைப்பூசம்

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
## உலகப் பெருமஞ்சத்திருவிழா




**காலம்**
**11.02.2025 செவ்வாய்க்கிழமை பால்குடப்பவனி**

**ஆரம்பம்**
காலை 6.00 மணி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயம்

## பால்குடப்பவனி

- தைப்பூச தினத்தன்று யாழ்குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பெரும் தொகையான பக்தர்கள் ஒன்று சேர்ந்து பால்குடத்தினை எடுத்தல் வருடாவருடம் இடம்பெற்று வருகிறது.
- அடியவர்களின் வசதி கருதி பால், குடம், என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
- ஒரு பால்குட பற்றுச்சீட்டு - 400/-
- எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன் ஆலய கரும பீடத்தில் காலை 9.00 - 11.00, மாலை 4.30 - 6.00 மணிவரை பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

**காலை :- மாபெரும் பொங்கல் (09.00 - 2.00 மணிவரை)**

- பொங்கல் பொருட்கள் அனைத்தும் ஆலயத்தில் உண்டு. பொங்கல் பானை, அகப்பை, பேசின், அரிசி, சர்க்கரை, நெய், தேன், கயு, முந்திரிகை வத்தல், வாழை இலை, பால் விறகு என்பன உள்ளன.
- வெண் பொங்கல் பொதி - 1500 /=
- சர்க்கரைப் பொங்கல் பொதி - 2100/=
- இரவு 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை தொடர்ந்து உலகப் பெருமஞ்சத்தில் முருகப் பொருமான் வீதிவலம் வரும் நிகழ்வும் பாரம்பரிய கலை கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெறும்.

**அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

............ விளம்பர அனுசரணை............

KATYU GROUP
CONSTRUCTION DESIGN CONSULTANT
K.K.S Road, Inuvil, Jaffna. +94 778 155 233 Katyu Group

அக்ஷய மஹால்
Akshaya Mahal
கே.கே.எஸ் வீதி, இணுவில். தொ.இல: 0212241510
akshayamahal@yahoo.com 0777111009
www.lathudigital.com

(cr.44275) (N-1)
அடியவர்கள் அனைவரும் வாரீர்.....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர்களால் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் கல்லூரி அதிபரிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன.

(ச-25,9)



# ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தல்

சாவகச்சேரி, பெப். 10

தென்மராட்சிக் கல்வி வலய விசேட கல்வி அலகு மாணவர்களின் ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு சாவகச்சேரி சக்தியம் மன் வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ரமணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் கலந்துகொண்டார். (ச-25,9-28)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஆசிரியர் மதுரகவி காரை எம்பி.அருளானந்தன் கலந்துகொண்டு 'சைவத்தமிழர் கலாசாரம்' எனும் தலைப்பில் ஆன்மீக உரை ஆற்றினார். (ச-41-66)



# குளிர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், பெப்.10

அராலி மேற்கு நீளத்திக்காடு அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்மாள் ஆலயத்தின் வருடாந்த குளிர்த்தி உற்சவம் துஷ்யந்தக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்களால் கடந்த புதன்கிழமை வெகுசிறப்பாக இடம் பெற்றது.

கருவறையில் வீற்றிருக்கும் பேச்சியம்மாள், பரிவாரத் தெய்வங்களான பிள்ளையார், முருகன் ஆகிய தெய்வங்களுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்றன.

தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜைகள் இடம்பெற்றன. பின்னர் பேச்சியம்மாள் சிங்க வாகனத்தில் எழுந்தருளியாக வீற்றிருந்து உள்வீதியூடாக வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ச-41-27)



# பால்நிலை வன்முறைகள் கிளிநொச்சியில் ஆராய்வு

கிளிநொச்சி , பெப்.10

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவின் ஏற்பாட்டில், பால்நிலை வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவை வழங்கும் நிலையங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு ஆராயப் பட்டுள்ளது. குறித்த குழுவினர் கிளிநொச்சிப் பொலிஸ் நிலைய சிறுவர் பிரிவு, நீதிமன்ற வளாகம், மாவட்ட மருத்துவ மனை, நட்பு நிலையம், பிராந்திய மதுபான புனர்வாழ்வு நிலையம் என்பவற்றுக்குச் சென்று பார்வையிட்டனர். குறித்த சேவை நிலையங்கள் மூலம் பொதுமக்களுக்குக் கிடைக்கும் சேவைகள் தொடர்பாகவும் தெளிவூட்டப்பட்டன. (ச-25,113)

மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில் வாய்ப்பு ஆதரவினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் விருதுவழங்கும் நிகழ்வானது மாவட்ட சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இணைப்பாளர் ந. ரதிக்குமார் தலைமையில் யாழ். தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ச-25,27-9)






தென்மராட்சிப் பிரதேச செயலக மனிதவலு அபிவிருத்தி உத்தியோகத்தர்களால், "பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்வி,ஒழுக்கம் , பாதுகாப்பு மற்றும் தொழிற்பயிற்சி" தொடர்பாக மாணவர்களின் பெற்றோருடனான கலந்துரையாடல் சாவகச்சேரி மட்டுவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் நடத்தப்பட்டது. (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08.06.1944 | 08.02.2025 |



## இம்மானுவேல் அன்ரனி துரைரெட்னம்

யாழ்ப்பாணம் கதீற்றல் ஒழுங்கையைச் சேர்ந்த இம்மானுவேல் அன்ரனி துரைரெட்னம் நேற்றுமுன்தினம் (08.02.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இம்மானுவேல் - மாக்கிறற் (பஞ்சமணி) தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான ஜோசப் - றொபி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான குணம், ராணி மற்றும் லில்லி, சந்திரன், இராஜக்கோன், றூபி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், லில்லி மேரி ஆன் அவர்களின் அன்புக் கணவரும், அஞ்சலோ செல்வராசா (ஆண்டவர் செல்வா- பிரான்ஸ்), பற்றிக் (பிரான்ஸ்), மரீனா (ஆசிரியர் - யா/ கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்), விஜயகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற எட்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மேசி (பிரான்ஸ்), அமுதா (பிரான்ஸ்), ஜெராட் திலகேந்திரா, சூட்டி (பிரான்ஸ்), சுதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜொனத்தன், ஜெறமி, ஜொய்சிகா, ஜெனோவன், அல்வின், வனிசா, காலஞ்சென்ற ஒஸ்ரின் மற்றும் அல்வினா, அறோவன், அட்லி, அல்பா, வெரினா, வருன், விசான், சவியோன், செறபியோன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.02.2025) செவ்வாய்க்கிழமை புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி காலை 9.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**145/7, கதீற்றல் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 974 2073.**

(CS/) N-1

# மரண அறிவித்தல்



## திருமதி இராசரத்தினம் சிவசோதியம்மா

கைதடி கிழக்கு கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சிவசோதியம்மா அவர்கள் நேற்று (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம்-தில்லைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் இராசரத்தினத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் பொன்னம்மா, கந்தசாமி ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, தளையசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சியாமளா, பிரேமிளா (ஆசிரியை, யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அருமைத் தாயாரும் தினேஷ் (சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம்), தமிழ்ச்செல்வன் (அதிபர், யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிசாந், கஸ்னிகா, திவ்வியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கைதடி கிழக்கு.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## அரச பணியாளர்களின் சம்பளம் உயர்த்தப்படும்

எதிர்காலத்தில் அரச பணியாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் அதிபர் தொழிற்சங்கக் கூட்டணியினருக்கு இடையே அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியர், அதிபர் மற்றும் ஆசிரியர் ஆலோசனை சேவைகளிலும் கல்வித் துறையிலும் உள்ள பல பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

(ச-இ)

# 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 12.04.1953 | 10.02.2006 |



## அமரர் லோறன்ஸ் அலெக்ஸ்சாண்டர்

**எம் வாழ்வின் ஒளியே!**
**அன்பின் தெய்வம், எம் வழிகாட்டியே அப்பா...**
**காலம் கடந்தும் உன் பணிகள் வாழும்**
**உழைப்பின் பெருமை என்றும் நிலைக்கும்**
**தந்தை எனும் பொன் பெயருக்கு**
**நீயே உருகோலானாய் அப்பா!**

**உம் நினைவுடன் என்றும் வாழும்**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**சகோதரர்கள், சகோதரிகள்,**
**பேரப்பிள்ளைகள்.**

(cs.2474) (N.1)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29.06.1959 | 27.01.2025 |



## மேரி றெஜீனா மரியதாஸ் (மலர்)

உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய மேரி றெஜீனா மாரியதாஸ் கடந்த 27.01.2025 இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் - செல்வநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியதாஸ் அவர்களின் அன்பு மனைவியும், மேரி எமரென்சியா ( இலங்கை வங்கி ), மேரி வலென்சியா ( கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லிங்கேஸ்வரன், ஜீவேந்திரா போல் ஆகியோரின் மாமியும், மேளின்ரதி, றெஜீனா, காலஞ்சென்ற மார்க்கிரட் ஆகியோரின் மைத்துனியும், ஷாத்விகா, ஷாத்விகன், சர்வின் ஆகியோரின் பேர்த்தியும், மரியதாஸ், கிங்ஸ்லி, அல்பிரட் ஆகியோரின் பாசமிகு தங்கையும், நளினி, தயாளினி, ரம்மியா, ரேகா, டிரோன், ஷாருஜன், துஷாரினி ஆகியோரின் அத்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இன்று (2025.02.10) திங்கட்கிழமை நடைபெறும் அதேவேளை ஆனைக்கோட்டை அடைக்கல மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி பூசை மாலை 5.00 மணி அளவில் ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**மரியதாஸ் - 077 081 3402**
**எமரென்சியா - 077 958 3596**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS/57460) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றாலை மின்னுற்பத்தி சுற்றாடல் தாக்கம் மதிப்பீடு

கிளிநொச்சி, பெப்.10

பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேரவில் பகுதியில் அமைக்கப்படவுள்ள 204 மெகாவாட் காற்றாலை மின்உற்பத்தித் திட்டம் மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 100 மெகாவாட் காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் ஆகியவற்றின் சுற்றாடல் தாக்க மதிப்பீடு தொடர்பில் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் ஆராயப்பட்டது.

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் ரி.எம்.ஜே.டபிள்யூ பண்டார தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் உதவிப்பணிப்பாளர்களான பி.டிலக்ஷன், சந்துர வன்னியாராச்சி , மாவட்டச் செயலர் எஸ். முரளிதரன் ,பிரதேச செயலாளர்கள், மாவட்டத்தின் இராணுவ அதிகாரி, விமானப்படை அதிகாரி உள்ளிட்ட மாவட்டத் திணைக்கள உதவிப்பணிப்பாளர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப்பலர்கலந்துகொண்டனர்.(ச-25,113,27)



அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி வித்தியாலய மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. அதிபர் து. புஷ்பகாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வித்தியாலய பழைய மாணவர் நா.சுப்பிரமணியம் கலந்துகொண்டார். (ச-25,9)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் ச. லலீசன் தலைமையில் கருத்தரங்கு ஒன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் லண்டன் சிவாபிள்ளை பங்கேற்று லண்டன் பாடசாலைக்கல்வி முறைமை, இலங்கையின் கல்வி முறைமையுடனான ஒப்பீடு என்ற பொருளில் கருத்துரை வழங்கியதோடு, கலாசாலையின் முதாமைத்துவக்குழுவினரால் சிவாபிள்ளை கௌரவிக்கப்பட்டார். (ச-41)

கொடுப்பனவு தரவில்லை

# வவு. இ.போ.ச.சாலை பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப்.10

மேலதிக நேரக்கொடுப்பனவுகள் இரண்டு மாதங்களாக வழங்கப்படவில்லை என்று தெரிவித்து இலங்கைப் போக்குவரத்துச்சபையின் வவுனியாசாலையின் பொறியியல் ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் சாலைக்குச் சென்ற வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட்ட ஊழியர்களுடன் பேச்சில் ஈடுபட்டு அவர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவை விரைவாக வழங்குவதாக உறுதியளித்தார். இதனையடுத்து குறித்த போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது. அதே வேளை குறித்த விடயம் தொடர்பாக எதிர்வரும் வாரம் போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

(ச-110)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.10

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் சிவநெறிப் பிரகாசர், சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடர் 12 சொற்பொழிவு ஆலய சண்முகவிலாச மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இச்சொற்பொழிவை சைவப்புலவர், பிரசங்க பூஷணம் ச. முகுந்தன் "துணைவர்வருபடலம்" என்னும் பொருளில் ஆற்றினார். (ச-41)



# வெள்ளை ஈ தாக்கம் தடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் , பெப். 10

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தென்னைமரங்களில் அவதானிக்கப்பட்டுவந்த வெள்ளை ஈக்களின் தாக்கம் தற்போது வேறு பயன்தரு மரங்களிலும் அவதானிக்கப்பட்டுள்ளது. அதனை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் துறைசார் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் விவசாயத்துறையினர் மற்றும் மாவட்டச் செயலர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ச-22,20)


## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 07 . 1952

மறைவு
08 . 02 . 2025



பரமேஸ்வரி நவரத்தினராஜா

சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி நவரத்தினராஜா அவர்கள் நேற்று முன்தினம் (08.02.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற இராசையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரத்தினராஜா அவர்களின் அன்பு மனைவியும் சோபனா, பிரதீபா (நியூசிலாந்து), மதுரா ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகலிங்கம் (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்-அச்சுவேலி), ஜெயசீலன் (நியூசிலாந்து), தர்சனன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் சந்திராதேவியின் பாசமிகு சகோதரியும், விவேதிகா (கொமர்ஷல் வங்கி-சாவகச்சேரி), கபிஸ்னா (யா/ இந்து மகளிர் கல்லூரி), ஷாய்சரன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆகாஷ் (நியூசிலாந்து), ஆருஷா (நியூசிலாந்து) அபிநவ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இராசதுரை, கனகரஞ்சிதம், காலஞ்சென்ற சரோஜினிதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (11.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
ரவி-077 614 0068
ஜெயசீலன்- +640 225167120
தர்சனன்-077 139 0309

(CR 44297) V-1

தகவல்:
குடும்பத்தினர்.




# இடர் நிவாரணம் கலந்துரையாடல்


மன்னார், பெப். 10

தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையத்தின்கீழ் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களுக்கான முன்னேற்ற மீளாய்வு மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் சுற்றறிக்கையின் வழிகாட்டல்கள் தொடர்பான கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ச-25,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 12 . 1945



தோற்றம் 09 . 02 . 2025

### செல்லையா குலசிங்கம்

சந்தைவீதி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா குலசிங்கம் (அஞ்சல் தரம் பிரிக்கும் உத்தியோகத்தர்-சுன்னாகம் தபால் நிலையம்) அவர்கள் நேற்று (09.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-நல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதி அவர்களின் அன்பு கணவரும் காலஞ்சென்றவர்களான பத்மாவதி, பத்மநாதன், தருமகுலசிங்கம், சிவபாக்கியம் மற்றும் ரத்தினசிங்கம், சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பஞ்சாச்சரராணி மற்றும் லோகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் துஷ்யந்தி (கனடா), தயாழினி (முகாமைத்துவ உதவியாளர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை), லோஜாஜினி (சுருக்கெழுத்தாளர்-குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமாரன் (கனடா), வசீகரன் (ஆசிரியர்), யொஜானந்தன் (மாவட்ட முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் -முல்லைத்தீவு கச்சேரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அசோக், ரெஸ்மி (கனடா), யஸ்மிகா, யோகநேகா, அட்சஹிதேவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 194 9428

## மகளிர் தினப்போட்டிகள் விண்ணப்பங்கள் கோரல்

*யாழ்ப்பாணம், பெப்.10*

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, வட மாகாண மகளிர் விவகார அமைச்சு "அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு உரிமைகள்" எனும் கருப்பொருளை முன்னிலைப்படுத்தி, குறும்படத்துக்கான திரைக்கதை, குறும்படம், ஆவணப்படம், புகைப்படம் மற்றும் ஓவியப் போட்டிகளை நடத்தவுள்ளது.

திறந்தபோட்டிகளாக நடைபெறும் இந்தப் போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் மகளிர் விவகார அமைச்சு, வ.மா, இல. புருடி லேன், புங்கன் குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரி ஊடாகவோ அல்லது அமைச்சின் மின்னஞ்சல் npminwa@gmail.com மற்றும் தொலைபேசி இல 0221222 0882, 0212220883 ஊடாகவோ தொடர்புகொண்டு போட்டி நுழைவுக்கான விண்ணப்பம் மற்றும் விதிமுறைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும். மேலதிக விவரங்களுக்கு https://np.gov.lk/ எனும் வடக்கு மாகாண சபையின் இணையதளத்தினைப் பார்வையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச- 25)


## கௌரவிப்பு

யாழ்., பெப். 10

அகில இலங்கை சைவ மகாசபை தைப்பூசத் திருநாளை முன்னிட்டு நடத்தும் 'அன்பே சிவம்' விருது வழங்கும் நிகழ்வும், அற நெறி ஆசிரியர்கள் கௌரவிப்பும் யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் கேட்போர் கூடத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளன.

அகில இலங்கை சைவ மகா சபை யின் தலைவர் நா.சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், அறப்பணிகள் பல ஆற்றிவரும் கு. சோதி நாயகிக்கு 'அன்பே சிவம் விருது' வழங்கப்படவுள்ளது. (ச-25,66)

## 43ம் நினைவஞ்சலி



மலர்வு : 27.10.2001 உதிர்வு : 30.12.2024

### அருள்ராஜ் சுவேதன்

திதி- மார்கழி வளர்பிறை பிரதமை

கடல் கடந்து நீயும் ஏனோ
கனடா செல்ல விரும்பினாயோ அன்று
வழியனுப்பி வைத்தே ஓராண்டுகள் ஆகும்
முன்னே சென்றதேனோ
கதிகலங்கி நிற்கின்றோம் கனத்த
இதயத்தோடு நாமும்

டச்சு வீதி,
அளவெட்டி.

குடும்பத்தினர்

## 31ஆம் நினைவு நாள்

அமரர் சீமான் ஞானேஸ்வரி



மண்ணில் 26.07.1958

விண்ணில் 11.01.2025

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம்
கொள்பவன் இறப்பினும்
வாழ்வான்"

தகவல்:
உத்தியோகத்தர்
நலன்புரிச் சங்கம்
கிளி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்

உ
சிவமயம்

## தசாஹ கிருஹயக்ஞ அழைப்பிதழ்



அன்புடையீர்,

நிகழும் குரோதி வருடம் தை மாதம் 20ம் நாள் (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

### சிவஸ்ரீ வாஞ்சிநாத ஐயர் நவநீதக் குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

11-02-2025 செவ்வாய்க்கிழமை தசாகம் காலை 10.00 மணி
12-02-2025 புதன்கிழமை ஏகோதிஷ்டம், மாசியம்.
13.02.2025 வியாழக்கிழமை சபீண்டீகரணம்
14-02-2025 வெள்ளிக்கிழமை கிருஹயக்ஞம் (சமாராதனை) ந.ப. 12.00 (மதிய போசனம்)

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அழைக்கின்றோம்

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

பெருமாக்கடவை
அளவெட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(CS 583)V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழக்கை...

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அனுப்பியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் உள்ள விடயங்கள் வருமாறு:-

திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் எமது கட்சி அங்கத்தவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் 2ஆம், 4ஆம், 7ஆம் எதிரிகளான மூவரும் வரைவு இணக்க நியதிகளை கடந்த 7ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளோம்.

அந்த அடிப்படையில் எதிர்வரும் 13ஆம் திகதி இந்த நிபந்தனைகளை எதிராளிகளான நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டு ஓர் இணக்கப்பாட்டுக்கு வர முடியும் என்ற நம்பிக்கையில் அந்த வரைவு இணக்க நியதிகளின் பிரதிகளைத் தங்களுக்கு அனுப்பியுள்ளேன் -என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு குறித்த இணக்க நியதி வரைவும் இணைக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

**அந்த வரைவில்,**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற நிர்வாகிகள் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியான பொதுச்சபையின் 326 உறுப்பினர்களுடன் தலைவர், பொதுச்செயலாளர் உள்ளிட்ட கட்சியின் நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் தொடர்பில் இணக்கம் எட்டப்படும் தினத்தில் இருந்து இரண்டு மாதகாலத்துக்குள் அந்தத் தேர்தலை நடத்துவதற்கு தமது தரப்பினர் இணங்கிக்கொள்கின்றனர் என்றும், 326 உறுப்பினர்கள் தவிர்த்து வேறு எந்த உறுப்பினர்களும் வாக்களிப்பத மற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நிர்வாகிகள் தெரிவு தொடர்பில் மாவை சோ.சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன், ப.சத்தியலிங்கம், ச.குகதாசன், எஸ்.குலநாயகம், எஸ்.யோகேஸ்வரன், இரத்தினவடிவேல் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டு இந்த வழக்கு திருகோணமலை மாவட்ட நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-எ-இ)

## போதை...

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கொழும்புத்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும், சந்தேகநபரிடம் இருந்து 20 போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-20)

## இளைஞனை...

னர். வெளிநாடு செல்வதற்காக இளைஞர் ஒருவர் முகவர் ஒருவரைத் தொடர்பு கொண்டபோது, 80 லட்சம் ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிட்டு வங்கி அறிக்கையைக் கொண்டு நேரடியாக வந்து சந்திக்க வேண்டும் என்று அந்த முகவர் தெரிவித்துள்ளார். அதை நம்பிய இளைஞர் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிட்டுவிட்டு வங்கி அறிக்கையுடன் யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு முகவரைச் சந்திப்பதற்கு வந்துள்ளார்.

ஆரியகுளம் உள்ள பகுதியில் இளைஞன் நின்றபோது கார் ஒன்றில் வந்த கும்பல் இளைஞரைக் கடத்திச் சென்றுள்ளது. இளைஞரை மிரட்டிய அந்தக் கும்பல் வங்கிக் கணக்கில் இருந்த 80 லட்சம் ரூபா பணத்தை வேறாரு வங்கிக் கணக்குக்கு மாற்றிவிட்டு இளைஞரைக் கோப்பாய் பகுதியில் இறக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

பணத்தை இழந்த இளைஞர் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார். விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவுப் பொலிஸார், பணம் மாற்றப்பட்ட வங்கிக் கணக்குக்கு உரிய பெண் ஒருவரைக் கைதுசெய்தனர். அதன்பின்னர் இளைஞரைக் கடத்திய குற்றச்சாட்டில் மேலும் மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பெண்ணின் வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்ட பணம், அதிலிருந்து வெறொரு வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது. அந்தப் பணத்தை மீட்பது தொடர்பாக மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இளைஞரைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

## நல்லிணக்க...

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரம் மற்றும் நல்லிணக்க முன்னெடுப்புகளில் டில்லியே இதுவரை அதிகமாகப் பங்களித்து வருகின்றது. இலங்கையில் தனது ஆதிக்கத்தைநிலைநிறுத்துவதற்கு சீனா பல்வேறு திட்டங்களை முன்னெடுத்திருந்தாலும், இனப்பிரச்சினை விவகாரம், நல்லிணக்க முன்னெடுப்புக்கள் தொடர்பாக இதுவரை பெரிதாக அக்கறை காட்டியிருக்கவில்லை. இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம், நல்லிணக்கச் செயற்பாடுகள் ஆகியவற்றில் தீர்மானம் மிக்க சக்தியாக இந்தியா செயற்படுவதாலேயே, அந்த நாட்டின் ஆதிக்கம் இலங்கையின் வடபகுதியில் உயர்கின்றது என்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கையின் வடபகுதியில் காலூன்றுவதற்கு சீனா முயற்சிக்கின்றபோதும், மக்களின் ஆதரவு சீனாவுக்குக் குறைவாகவே உள்ளது. வடக்கு மக்களின் மனங்களை வெல்வதற்கு சீனா தொடர்ச்சியாக வாழ்வாதார உதவிகள் உட்படப் பல திட்டங்களை செயற்படுத்துகின்றபோதும், இந்தியாவின் ஆதிக்கத்தைச் சீனாவால் முந்திச்செல்ல முடியவில்லை.

இந்தப் பின்னணியில் தேசிய இன விவகார ஆணைக்குழுவுக்கு பொறுப்பான அமைச்சர் பான் யூ தலைமையிலான சீனாவின் உயர்மட்டதூதுக்குழுவொன்று முதற்தடவையாக இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளது. எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பு வரவுள்ள இந்தத் தூதுக்குழு 23ஆம் திகதிவரை நாட்டில் தங்கி இருந்து முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்தவுள்ளது. இன நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பிலேயே இலங்கைத் தரப்புகளுடன், இந்தக் குழு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது.

சீன ஜனாதிபதியின் அமைச்சரவையில் முக்கியமான உறுப்பினரான பான் யூ, சீனாவில் சிறுபான்மையினத்தவர்கள் தொடர்பானவிவகாரங்களைக்கையாண்டு வருகின்றார். இவரின் முக்கியத்துவம் கருதி கடந்த வருடம் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவுக்கு உள்வாங்கப்பட்டார். இவர் தலைமையிலான குழு இலங்கைக்கு வருவது இராஜதந்திர ரீதியில் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது.

தற்போது இலங்கையில் ஆட்சியமைத்துள்ள அரசாங்கம் சீனச்சார்புள்ளது என்று கருதப்படும் நிலையில் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சீனா இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ள முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. இனப்பிரச்சினை, நல்லிணக்கச் செயற்பாடுகளில் மூக்கை நுழைப்பதன் ஊடாக இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள சீனா முயல்கின்றது என்றும் இராஜதந்திர வட்டாரங்களில் அறியமுடிகின்றது. (அ-எ-44)

## சித்திரைப்...

யுள்ளது. உள்ளூராட்சிச் சபைத்தேர்தல் திருத்தச் சட்டவரைவு தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குக் கிடைத்து, அதைக் கடந்தவாரம் நாடாளுமன்றுக்கு சபாநாயகர் அறிவித்திருந்தால் கடந்த 6ஆம் திகதி அதுதொடர்பில் விவாதம் நடத்துவது என்று திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிடைக்கவில்லை என்று சபாநாயகர் கடந்த 5ஆம் திகதி அறிவித்திருந்தார்.

இதனால் தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியங்கள் இல்லாது போயுள்ளன என்று தெரியவருகின்றது. ஆயினும் அடுத்த நாடாளுமன்ற அமர்வில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கு கிடைக்கும் பட்சத்தில் ஏப்ரல் மாத இறுதிக்குள் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்றும் அறியமுடிகின்றது. (அ-எ-44)

## நாடு...

நேற்று முற்பகல் 11.23 மணியளவில் நாடளாவிய ரீதியில் திடீரென மின்தடை ஏற்பட்டது. முன்னறிவித்தல் இன்றி நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்தடையால் பொதுமக்கள் குழப்பத்துக்கு உள்ளாகினர்.

மின்தடை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மின் மற்றும் எரிசக்தி அமைச்சர் ஜெயக்கொடி, பாணந்துறையில் உள்ள மின் இணைப்பு துணை மின்நிலையத்தில் குரங்கொன்று உள்நுழைந்து மின்தாக்கத்துக்கு இலக்கானமையே இந்தத் திடீர் மின்தடைக்குக் காரணம் என்று தெரிவித்தார். குரங்கு மின்தாக்கத்துக்கு இலக்கானதால் ஏற்பட்ட சமச்சீரற்ற நிலைமை காரணமாகவே மின்தடை ஏற்பட்டது என்று மின்சாரசபைத் தகவல்கள் தெரிவித்தன.

மின் விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகளை மின்சார சபை மேற்கொண்டது. இதனால் நேற்றுஇரவு 7 மணியளவில் இரவு நாடு முழுவதும் மின்விநியோகம் வழமைக்குத் கொண்டுவரப்பட்டது.

இறுதியாக கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி திடீர் மின்தடை ஏற்பட்டிருந்தது. அப்போது மின் விநியோகம் வழமைக்குத் திரும்ப 6 மணிநேரம் எடுத்தது.

அதேவேளை, நேற்று ஏற்பட்ட மின்தடையால் ரயில் சேவைகளில் தடங்கல் ஏற்பட்டன என்று ரயில்வேத் திணைக்களம் தெரிவித்தது. ரயில் கடவைகளில் உள்ள சமிக்ஞை அமைப்புகளின் செயற்பாடுகளில் சிக்கல் ஏற்பட்டதால் ரயில் சேவைகளில் சில தடங்கல் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (அ-எ-இ)

## மின்தடை...

இந்தச் சம்பவம் தொடர்பாக மின்சார சபையின் உள்ளக் குழு ஊடாக விசாரணை நடத்தப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக மின்சக்தி அமைச்சும் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற நிலைமை மீண்டும் ஏற்படாதிருக்கத் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்காக இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

## மூத்த...

40 ஆண்டுகளுக்கும் மேலாக ஊடகத்துறை அனுபவம் கொண்ட இவர், தினக்குரல் , வீரகேசரி உள்ளிட்ட சில தமிழ் பத்திரிகைகள், வார வெளியீடுகள் என்பவற்றில் ஆசிரியராகக் கடமையாற்றியவர்.

உடல்நலக்குறைவு காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர், நேற்றுமுன்தினம் திருநெல்வேலியில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பியிருந்த நிலையில், நேற்று மாலை மாரடைப்பால் காலமானார். (அ-எ-26-66)

## கெஹலியவுக்கு...

தார். நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சி ரயில் நிலையத்துக்குச் சென்ற அவர், அங்குள்ள நிலைமைகளை பார்வையிட்டு ரயில் நிலைய அதிகாரிகளுடனும், பொதுமக்களுடனும் கலந்துரையாடினார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கெஹலிய ரம்புக்வெல பல கோடிகளைப் பெற்றிருக்கின்றார். ஆனால் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 லட்சம் ரூபா, 7 லட்சம் ரூபா , 10 லட்சம் ரூபா என்ற சிறிய தொகைகளே வழங்கப்பட்டன. கெஹலியவுக்கு வழங்கியுள்ள நஷ்டஈட்டை கிளிநொச்சி மாவட்டத்துக்கு வழங்கியிருக்கலாம்.

பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் நாடு முழுவதும் இருக்கின்றன. கடவைக் காப்பாளர்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்கு மக்களுடன் கலந்துரையாடி தீர்வு பெறுவதற்குரிய நடவடிக்கைகளை விரைவில் செய்வோம் - என்றார். (அ-எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவு பொதிகள் சேவை
DHL
வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.


திருமுருகன் கொம்நெற்
பணியாளர் தேவை
321, K.K.S Road, Jaffna.
077 755 4528

மேற்பார்வையாளர் தேவை (Supervisor)
யாழ்ப்பாணத்தில் இயங்கும் கிளை நிறுவனம் ஒன்றிற்கு மேற்பார்வையாளர் தேவை.
தகைமைகள்:
NVQ Level IV (Landscaping / Horticulture)
➤ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 076 367 8237
(CS 57471) N-1

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம்-புன்னாலைக்கட்டுவன் செல்லும் பிரதான வீதியில் 100m தூரத்தில் 20 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
➤ குடியிருப்பு சூழல், நல்ல தண்ணீர் ஊற்று
➤ பார்வையிடும் நேரம்- காலை 08.00 மணி தொடக்கம் மாலை 06.00 மணி வரை
தொடர்பு: 076 755 8606 / 077 623 4204

# பயங்கரவாதத்தை எதிர்க்க இலங்கைக்கு முழுஆதரவு!

## இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

கொழும்பு, பெப். 9

இலங்கையால் மேற்கொள்ளப்படும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு இந்தியா நிபந்தனையற்றதும், அசைக்கமுடியாததுமான ஆதரவை வழங்கும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

சந்தோஷ் ஜாவுக்கும், இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துயகொந்தாவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் மாலை சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போதே, இலங்கையின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தலும், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்கும் இந்தியா என்றும் துணைநிற்கும் என்று தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகாலப் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டதாகவும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கு இந்தியா இன்றுவரை வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவுக்கு, இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான ஆதரவை இந்தியா தொடர்ந்தும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துயகொந்தா முன்வைத்தார். (ம-இ)

## திடீர் மின்தடையால் நோயாளர்கள் பாதிப்பு

கிளிநொச்சி, பெப்.10

நாடளாவிய ரீதியில் நேற்று ஏற்பட்ட மின்தடை காரணமாக கிளிநொச்சி மருத்துவமனை சேவைகளில் தடங்கல் ஏற்பட்டதுடன் நோயாளர்களும் பாதிப்பை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொதுமருத்துவமனையில் காணப்படும் மின்பிறப்பாக்கி இயங்காத நிலையில் காணப்படுகின்றமையால் இந்த நிலை ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. (ச-113)


## சதொசவில் அரிசி விலைகுறைப்பு

கொழும்பு, பெப்.10

அரிசியின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன்படி இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அரிசியின் விலை 208 ரூபாவாகவும் நாட்டரிசியின் விலை 219 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

மரண அறிவித்தல்

சிவக்கொழுந்து நாகராஜா (சந்திரன் ஆசாரி)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவிலடி மற்றும் இல. 85, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து நாகராஜா (சந்திரன் ஆசாரி) நேற்றுமுன்தினம் (08.02.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், கவிதா (ஆசிரியை - கோண்டாவில் இந்துக் கல்லூரி), லதா (சுவிஸ்), கேமமாலினி (இலங்கை), கஜேந்திரன், திருக்குமரன் (சவுதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாதன் (லண்டன்), தயாநாதன் (சுவிஸ்), இலங்கேஸ்வரி (லண்டன்), ஞானகுமார் (இலங்கை), பாலேந்திரா, சிவக்குமார் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகலட்சுமி (லண்டன்), புவனேஸ்வரி (சுவிஸ்), இராஜேந்திரம் (மட்டக்களப்பு), தேவி, புஷ்பகரி, மாலதி ஆகியோரின் மைத்துனரும், ஜெயக்குமார், துசியந்தன் (சுவிஸ்), சுரேஸ்குமார் (இ.போ.ச), குகரஞ்சினி, கௌசிகா (மருந்து கலவையாளர் - தள வைத்தியசாலை - மூதூர்), ஆகியோரின் அன்பு மாமனாரும், டர்ஷான், அக்ஷிதா, கஜந், அகன், மகிழன் ஆகியோரின் பாசமிகு பேரனும், கஜன், அபிதா, ஜேன் ஆகியோரின் தாய் மாமனும், சிந்து, சுகன்ஜா, வெங்கடேஸ், துஜானா, பவித்திரா, பதுஷா, நிதுஷன், பிரியங்கா, பிரசாந் (அனு), பிரதீக்கா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.02.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னை மடியில் 24.12.1952 — அம்பாள் அடியில் 08.02.2025

இல. 85, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
077 735 8399
074 024 2596

(CS/) N-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org